# සීමා නිර්ණය කොමිෂන් සභාව
# எல்லை நிர்ணய ஆணைக்குழு
# DELIMITATION COMMISSION

කාර්තුමය ප්‍රගති වාර්තාව
2017- 4 වැනි කාර්තුව

காலாண்டு செயலாற்றுகை அறிக்கைகள்
2017 - 4ம் காலாண்டு

Quarterly Performance Report
2017 – 4th Quarter

## இலங்கை எல்லை நிர்ணய ஆணைக்குழு
## 2017, நான்காம் காலாண்டு அறிக்கை
## (2017 ஒக்தோபர் 1 ஆம் திகதி தொடக்கம் திசெம்பர் 31ஆம் திகதி வரை)

### 1.0 பின்னணி

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41 ஆ மற்றும் 95(1) ஆம் உறுப்புரைகளுக்கமைவாக அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழு கலாநிதி கே. தவலிங்கம் அவர்களை அதன் தவிசாளராகவும், கலாநிதி ஏ.டீ.பண்டாரநாயக்க மற்றும் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் ஆகியோர்களை அங்கத்தவர்களாகவும் கொண்டு 2015 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் செயற்பட்டுவருகின்றது.

தற்போதைய அரசியல் யாப்பில், இந்தப் புதிதாகத் தாபிக்கப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்கள் தெளிவுபடுத்தப்படவில்லை. அரசியல் யாப்பில் உட்சேர்க்கப்படுகின்ற திருத்தமொன்றின் மூலம் அல்லது புதிய அரசியல் யாப்பொன்றின் மூலம் தனியான ஓர் எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்றைத் தாபித்து அதற்குக் கையளிக்கப்படுகின்ற பணிப்பொறுப்புக்கள் மூலம் அனைத்து மட்டங்களிலுமான எல்லை நிர்ணயங்களை (உள்ளூராட்சி, மாகாண சபைகள் மற்றும் மத்திய அரசுக்குத் தேவையான அனைத்து எல்லை நிர்ணயங்களை) நியாயமாக மேற்கொள்வதற்கு வழிவகுப்பது அரசியல் அமைப்பு பேரவையின் கருத்தாகுமெனத் தெரிக்கப்பட்டுள்ளது.

### 2.0. நோக்கு:-

"நெறிமுறை மற்றும் நியாயமான கோட்பாடுகளின் அடிப்படையில் எல்லைகளை நிர்ணயம் செய்வதில் சிறந்து விளங்குதல்"

### பணிக்கூற்று :

"அரசியல் யாப்பினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவாறு சுயாதீனமாகவும், நெறிமுறையுடனும், நியாயமாகவும், வினைத்திறனுடனும், வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும், விசுவாசமாகவும் மற்றும் சட்டரீதியானதாகவும் எல்லைகளை நிர்ணயம் செய்தல்.

### குறிக்கோள்கள்.

- அனைத்து வாக்காளர்களுக்கும் அல்லது பிரசைகளுக்கும் சமமான உயர்ந்த அளவில் சமமான பிரதிநிதித்துவமொன்று கிடைக்கத்தக்கவாறும் மற்றும் மக்களின் சனநாயக உரிமைகள் மற்றும் அந்த நிலைமைகள் பாதுகாக்கப்படுகின்றவாறும் மற்றும் வினைத்திறன் கொண்ட விதத்தில் உறுதி செய்வதற்காக தேர்தல்கள் மாவட்டங்கள் மற்றும் ஏனைய நிருவாகப் பிரிவுகள் என்பவற்றின் எல்லைகளை நிருணயம் செய்தல்.
- தேர்தல்கள் மாவட்டங்கள் அல்லது நிருவாகப் பிரதேசங்கள் அல்லது கல்வி, சுகாதாரம் அல்லது பாதுகாப்புப் போன்ற சமூக – பொருளாதார சேவைகளை வழங்குவதற்கான எல்லைகளை நிர்ணயம் செய்வதற்காக கையளிக்கப்படுகின்ற, எல்லை நிர்ணயப் பணிகளைக் குறித்த காலப்பகுதியினுள் நிறைவு செய்து கொடுத்தல்.
- அரசாங்கத்திற்கும் மற்றும் வேறு நிறுவனங்களுக்கும் தமது தீர்மானங்களை எடுப்பதற்குத் தேவையான எல்லை நிர்ணயம் தொடர்பான அறிவு மற்றும் தேவையான தகவல்களை வழங்குதல்

- எல்லை நிர்ணயம் தொடர்பான தகவல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய எழுத்தாவணங்களைச் சேகரிக்கின்ற நிலையமொன்றைத் தாபித்தல்.

## 3.0. கொள்கை ரீதியான விடயங்கள்

**மாகாண சபைகள் தேர்தல் தொகுதிகளை அடையாளப்படுத்துவதற்காக எல்லை நிர்ணய குழுவைத் தாபித்தல் .**

2017 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டம் (2017 ஆம் ஆண்டின் திருத்தச் சட்டம்.) 2017.09.20 ஆம் திகதி பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. சட்ட வரைவில் ஒரு விடயமாக குறிப்பிடப்பட்டுள்ளதாவது" சனாதிபதி அவர்களால் ஐவர் கொண்ட எல்லை நிர்ணயக் குழுவொன்று நியமனம் செய்யப்படும்" என்பதாகும். ஏற்கனவே எல்லை நிர்ணய ஆணைக்குழுவொன்று நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டுள்ளதால் மேலும் எல்லை நிர்ணய குழுவொன்றை நியமனம் செய்வது ஏற்புடையதல்லவென்பது எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கருத்தாகக் காணப்பட்டமையினால் இவ்விடயம் தொடர்பாக சபாநாயகர் அவர்களுடன் கலந்துரையாடப்பட்டது. அக்கலந்துரையாடலின் பின்னர் தற்போதுள்ள எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தவர்களும் மேலும் இரு அங்கத்தவர்களும் கொண்ட ஐவர் அடங்கிய மாகாண சபைகள் தேர்தலுக்கான மாகாண சபைகள் தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கான குழுவொன்றை நியமனம் செய்வதற்கு அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கு பரிந்துரை செய்வதற்கு சபாநாயகர் அவர்கள் இணக்கம் தெரிவித்தார்.

அதற்கமைய 2017 ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல்கள் சட்டத்தின் 3அ(1) ஆம் பிரிவிற்கு அமைவாக மாகாண சபைகளுக்கு மாவட்டங்களிலிருந்து 50% உறுப்பினர் கொண்ட எளிய பெரும்பான்மை முறைமையில் நியமனம் செய்து கொள்ளத்தக்கவாறு ஒவ்வொரு நிருவாக மாவட்டங்களின் தேர்தல் தொகுதிகளை நான்கு மாதங்களினுள் நிர்ணயம் செய்து நிறைவு செய்வதற்காக பின்வரும் அங்கத்தவர்களைக் கொண்ட மாகாண சபைகள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயக் குழு 2017.10.04 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்டது.
அரசியல் யாப்பின் 19 ஆம் திருத்திற்கமைய தாபிக்கப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் இரு அங்கத்தவர்களும் இக்குழுவில் உள்ளடங்கும் வித்தில் இக்குழு நியமனம் செய்யப்பட்டது. இந்த நியமனங்கள் தொடர்பான அறிவித்தல் 2017.10.04 ஆம் திகதிய 2039/29 ஆம் இலக்க வர்தமானியில் வெளியிடப்பட்டது.

கலாநிதி கே. தவலிங்கம் (தவிசாளர்)
பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் (அங்கத்தவர்)
கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க (அங்கத்தவர்)
திரு. பீ.எம்.சிறிவர்தன (அங்கத்தவர்)
திரு. எஸ்.விஜேந்திரன் (அங்கத்தவர்)

மாகாண சபைகள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயக் குழுவினால் எல்லை நிர்ணய ஆணைக் குழுவின் செயலாளராகக் கடமையாற்றுகின்ற தேர்தல் ஆணைக்குழுவின் மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் திரு. சமன் ஸ்ரீ ரத்நாயக்க அவர்கள் இக்குழுவின் செயலாளராக நியமனம் செய்யப்பட்டார். எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் இணைப்புச் செயலாளர் திரு. நளின் சேமகே அவர்கள் மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழுவின் உதவிச் செயலாளராக நியமனம் செய்யப்பட்டார். (இணைப்பு - 1)

## 4.0. நிருவாக ரீதியான விடயங்கள்

### 1) எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கூட்டங்கள்

மாகாண சபைகள் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் எல்லை நிர்ணய அலுவல்கள் காரணமாக பின்வரும் கூட்டம் மாத்திரம்) எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் நடாத்தப்பட்டது.

- 25 ஆம் கூட்டம் - 2017.10.09 ஆம் திகதி

**2) மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழுவினால் கீழே காட்டப்பட்டுள்ள தினங்களில் 13 கூட்டங்கள் நடாத்தப்பட்டன.**

- முதலாவது கூட்டம் - 2017.10.09
- இரண்டாவது கூட்டம் - 2017.10.16
- மூன்றாவது கூட்டம் - 2017.11.01
- நான்காவது கூட்டம் - 2017.11.06
- ஐந்தாவது கூட்டம் - 2017.11.17
- ஆறாவது கூட்டம் - 2017.11.23
- ஏழாவது கூட்டம் - 2017.12.07
- எட்டாவது கூட்டம் - 2017.12.16
- ஒன்பதாவது கூட்டம் - 2017.12.17
- பத்தாவது கூட்டம் - 2017.12.20
- பதினோராவது கூட்டம் - 2017.12.22
- பனினீரெண்டாவது கூட்டம் - 2017.12.28
- பதின்மூன்றாவது கூட்டம் - 2017.12.29

**3). மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழுவின் மாவட்ட மட்டக் கூட்டங்கள்**

மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழுவினால் எழுத்து மூலம் கருத்துக்களை முன்வைக்குமாறு இவ்விடயம் தொடர்பில் ஆர்வம் காட்டுகின்ற அரசியல் கட்சிகள்,பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்களுக்கு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மாகாண சபைத் தேர்தலுக்கான தேர்தல் தொகுதி நிர்ணயம் செய்தல் தொடர்பில் அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டறிந்து கொள்வதற்காக 2017.11.09 ஆம் திகதி தொடக்கம் 2017.12.08 ஆம் திகதி வரை 25 மாவட்டங்களிலும் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

**4.) எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அலுவலகம்.** :- இவ்வலுவலகம் நில அளவையாளர் நாயகத்தின் அலுவலகக் கட்டிடத்தில் தாபிக்கப்பட்டது. இவ்வலுவலகத்தையே மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழுவின் அலுவலகமாகவும் பயன்படுத்தப்பட்டது.

**5). எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணியாட்குழு.** :-

- **நிரந்தரப் பணியாட்குழு**

ஒரு நிருவாக அலுவலர், இரண்டு அரச முகாமைத்துவ சேவை அலுவலர்கள், இரண்டு சாரதிகள் மற்றும் இரண்டு அலுவலக கனிட்ட ஊழியர்கள் ஆகியோர் இந்த அலுவலகத்திற்கு நிரந்தப் பணியாட் குழுவினராக இணைப்புச் செய்யப்பட்டுள்ளனர். மாகாண சபைகள் எல்லை நிர்ணயப் பணிக் காலப்பகுதியின் போது அதன் கடமைகளுக்காக இப்பணியாட் குழுவினரே ஈடுபடுத்திக் கொள்ளப்பட்டனர்.

- **மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழுவின் தற்காலிக பணியாட்குழுவினர்**

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் நிரந்தரப் பணியாட்குழுவினருக்கு மேலதிகமாக மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழுவின் பணிப்பொறுப்புக்களை உரிய காலப்பகுதியினுள் நிறைவு செய்து கொள்வதற்காக நில அளவைத் திணைக்களத்தின் பகுதி நேர அலுவலர்கள் 7

பேரும், 2 மாதங்களுக்காக ஓய்வு பெற்ற ஓர் அலுவலரும் அமய அடிப்படையில் அலுவலர்களாக ஆட்சேர்ப்புச் செய்து கொள்ளப்பட்டனர்.

**6). வாகனங்கள்** :- எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு இரண்டு வாகனங்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளது. மாகாண சபைகள் எல்லை நிர்ணயக் குழுவின் கடமை அலுவல்களுக்காகவும் அவ்விரு வாகனங்களும் பயன்படுத்தப்பட்டன.

**5.0. பிரச்சினைக்குரிய விடங்கள்.**

1. நியமனங்களைக் கையேற்றுக் கொண்டதன் பின்னர் எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அங்கத்தவர்கள் அரசியலமைப்புப் பேரவையுடன் முதலாவது கூட்டத்திற்குக்காக 2015.11.19 ஆம் திகதி அழைக்கப்பட்டனர்.

2. இதற்கு முன்னர் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று புதிதாகத் தாபிக்கப்பட்ட எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்கள் நடைமுறை அரசியல் யாப்பில் தெளிவுபடுத்தப்படவில்லை. அத்தோடு தேர்தல் மாவட்டங்கள் மற்றும் நிருவாக மட்டங்களுக்காக பல்வேறு முறைகளில் எல்லை நிர்ணயம் செய்வதற்காக பல்வேறுபட்ட சட்ட திட்டங்கள மற்றும் செயலொழுங்கு விதிகள் ஊடாக வேவ்வேறுபட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த ஏற்பாடுகளை நாட்டிற்கு உயர்ந்த பட்ச நண்மையைப் பெற்றுக் கொடுப்பதற்காக பயனுறுதி வாய்ந்ததாக தயாரிக்க வேண்டியுள்ளது.

3. அந்தப் பணியுடன் தொடர்புடையதாக,

- "அரசியல் யாப்புத் திருத்தம் மூலம் எல்லலை நிர்ணய ஆணைக்குழுவின் தத்துவங்கள் மற்றும் பணிப்பொறுப்புகளை விரிவு படுத்தல்" தொடர்பான முன்மொழிவொன்று 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் அரசியலமைப்புப் பேரவைக்கு சமர்டப்பிக்கப்பட்டது.
- " அரசியல் யாப்புத் திருதத்மொன்றைச் சமர்ப்பிக்கும் போது அல்லது புதிய அரசியல் யாப்பொன்றைத் தயாரிக்கும் போது எல்லை நிர்ணய ஆணைக்குழு தொடர்பில் கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள்" என்ற தலைப்பில் தவிசாளர் அவர்களால் தயாரிக்கப்பட்ட இணைப்பொன்று சகிதம் 2016 ஆம் ஆண்டு யூலை மாதம் அந்த முன்மொழிவுகள் அரசில் யாப்பு வழிநடாத்தல் குழுவின் உப குழுவின் செயலாளருக்குச் சமர்பபிக்கப்பட்டது. உப குழுவினால் இம்முன்மொழிவுகள் கருத்திற் எடுக்கப்பட்டுள்ளது.

- இலங்கையின் எல்லை நிர்ணயத்திற்கான கோட்பாடுகள் மற்றும் கொள்கைச் சட்டகம் என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்ட ஒரு கடித ஆவணம் புதிய அரசியல் யாப்பொன்றை வரையும் போது அரசியல் யாப்புச் சபையின் வழிநடாத்தல் குழுவின் அவதானத்திற்குச் சமர்ப்பிப்பதற்காக அக்குழுவின் தவிசாளரான கௌரவ பிரதமர் அவர்களிடம் 2016 ஆம் ஆண்டு ஒக்தோபர் மாதம் சமர்ப்பிக்கப்பட்டது.

- எல்லை நிர்ணய ஆணைக்குழு இந்த முன்மொழிவுகள் தொடர்பான பதில்களை எதிர்பார்த்தவண்ணமுள்ளது.

## 6.0. நிதிசார் விடயங்கள்.

**2018 ஆம் ஆண்டுக்கான வருடாந்த வரவு செலவுத்திட்டம்.**

மீண்டெழும் செலவுகள் 10.008 மில்லியன் ரூபா மற்றும் மூலதனச் செலவுகள் 0.725 மில்லியன் ரூபா என்ற அடிப்படையில் 10.733 மில்லியன் ரூபா தொகை அனுமதிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டமொன்று திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளது.

**செலவுகள் : 2017 ஆம் ஆண்டு சனவரி – திசெம்பர்**

2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தின் மூலம் குறித்தொதுக்கி வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகை 11.63 மில்லியன் ரூபாவாகும். குறித்தொதுக்கி வழங்கப்பட்ட தொகையில் பெரும் பகுதியான 10.43 மில்லியன் ரூபா மீண்டெழும் செலவுகளுக்காக செலவிடப்பட்டது. மொத்த மூலதனச் செலவுகள் 1.2 மில்லியன் ரூபாவாகும். இதற்கமைய 2017 ஆம் ஆண்டுக்காக எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு குறித்தொதுக்கி வழங்கப்பட்ட மொத்த ஒதுக்கீட்டுத் தொகை 11.63 மில்லியன் ரூபாவாகும்.

| செலவு விடயம் | செலவுகள் (மில்லியன்)) |
|---|---|
| 025-1-1-0-1001 | 5.12 |
| 025-1-1-0-1002 | 0.02 |
| 025-1-1-0-1003 | 1.46 |
| 025-1-1-0-1101 | 0.01 |
| 025-1-1-0-1102 | 0.00 |
| 025-1-1-0-1201 | 0.19 |
| 025-1-1-0-1202 | 1.20 |
| 025-1-1-0-1203 | 0.01 |
| 025-1-1-0-1301 | 0.14 |
| 025-1-1-0-1302 | 0.01 |
| 025-1-1-0-1303 | 0.02 |
| 025-1-1-0-1401 | 0.60 |
| 025-1-1-0-1402 | 0.35 |
| 025-1-1-0-1403 | 0.18 |
| 025-1-1-0-1409 | 0.08 |
| 025-1-1-0-1506 | 0.00 |
| 025-1-1-0-2102 | 0.10 |
| 025-1-1-0-2103 | 0.54 |
| 025-1-1-0-2401 | 0.03 |
| மொத்தம் | 10.05 |

**எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்ட மொத்த ஒதுக்கீட்டுத் தொகை 21.21 மில்லியன் ரூபாவாகும்.**

| செலவு விடயம் | செலவுகள் (மில்லியன்)) |
|---|---|
| 025-1-1-0-1002 | 0.40 |
| 025-1-1-0-1003 | 9.48 |
| 025-1-1-0-1101 | 0.30 |
| 025-1-1-0-1201 | 0.80 |
| 025-1-1-0-1202 | 1.08 |
| 025-1-1-0-1401 | 0.38 |
| 025-1-1-0-1402 | 0.65 |
| 025-1-1-0-1409 | 8.12 |
| மொத்தம் | 21.21 |

**எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் செலவுகள் : 2017 ஆம் ஆண்டு ஒக்தோபர் - திசெம்பர்**

| செலவு விடயம் | செலவுகள் (மில்லியன்)) |
|---|---|
| 025-1-1-0-1002 | 0.21 |
| 025-1-1-0-1003 | 4.19 |
| 025-1-1-0-1101 | 0.02 |
| 025-1-1-0-1201 | 0.24 |
| 025-1-1-0-1202 | 0.27 |
| 025-1-1-0-1401 | 0.30 |
| 025-1-1-0-1402 | 0.04 |
| 025-1-1-0-1409 | 4.33 |
| மொத்தம் | 9.58 |

**இணைப்பு 01 :-**

**மாகாண சபைகள் தேர்தல் தொகுதி எல்லை நிர்ணயத்திற்கான எல்லை நிர்ணயக் குழு.**

## குழுவின் பரப்பெல்லை

1. சனத்தொகைக் கணிப்பீட்டுக்கு (2012 ஆம் ஆண்டின்) அமைவான சனத்தொகையை அடிப்படையாகக்கொண்டு தற்போது அந்தந்த நிருவாக மாவட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அரை வாசியை தேர்ந்தெடுப்பதற்காக தேர்தல் தொகுதிகளை அமைக்க வேண்டியுள்ளது. ஆதலால் ஒரு மாவட்டத்திலுள்ள தேர்தல் தொகுதியொன்றிற்கும் வேறொரு நிருவாக மாவட்டத்தில் அமைக்கப்படுகின்ற தேர்தல் தொகுதியொன்றுக்கும் இடையில் மக்கள் தொகையில் பெரும்பாலும் வேறுபாடு நிலவ இடமுண்டு. அதைச் சமப்படுத்தும் அதிகாரம் குழுவிற்கு இல்லை.

2. ஒவ்வொரு நிருவாக மாவட்டத்திற்குமுரிய இடப்பரப்பிற்குள் இலங்கையில் நிலவுகின்ற சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பொது நிருவாக நடவடிக்கைகளுக்கான நிருவாக அலகு வகைகள் பல உள்ளன. அவை கிராம அலுவலர் பிரிவு மற்றும் பிரதேச செயலகப் பிரிவு முதலியனவாகும். இவ்வதிகார எல்லைப் பிரதேசங்கள் சட்ட ரீதியாக நிறுவப்பட்டுள்ளமை வரைபடப்படுத்தப்பட்டுள்ளமை மற்றும் இலங்கையின் சனத்தொகை கணிப்பீட்டு நடவடிக்கைகள் அவ்வலகுகளை அடிப்படையாக வைத்து மேற்கொள்ளப்படுகின்றமை காரணமாக இவ்வலகுகளின் எல்லைகளின் பால் கவனம் செலுத்தி எல்லை நிர்ணய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வெல்லைகளைத் தாண்டிச்செல்லும் விதத்தில் தேர்தல் தொகுதிகளின் எல்லைகளை வகுத்து அத்தேர்தல் தொகுதிகளின் சனத்தொகையை சமப்படுத்தும் நடமுறையொன்றை பின்பற்றுவதற்கு அவகாசம் இருக்கவில்லை.

3. ஒன்பது மாகாணங்களிலும் அமைந்துள்ள 25 மாவட்டங்களிலும் மாகாண சபைகளுக்காக தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற 437 உறுப்பினர்களில் 222 பேரை தேர்ந்தெடுப்பதற்குப் பொருத்தமான தேர்தல் தொகுதிகளை வேறுபிரிக்கும் நடவடிக்கைளை 04 மாத காலத்திற்குள் நிறைவு செய்வதற்கு குழு சுறுசுறுப்பாக இயங்கியது.

## நடபடி முறை

1. இத்தேர்தல் தொகுதி எல்லைநிர்ணய குழுவின் அங்குரார்ப்பணக் கூட்டம் தவிசாளரின் தலைமையிலும் அங்கத்தினர்கள் அனைவரினதும் பங்களிப்போடும் 2017 ஒத்தோபர் மாதம் 09 ஆந்தேதி தேர்தல் எல்லைநிர்ணய ஆணைக்குழு அலுவலகத்தில் நடைபெற்றது. குழுவின் ஆரம்ப கூட்டங்கள் பலவற்றில் குழுவுக்குக் கையளிக்கப்பட்டுள்ள பணிகளையும் பொறுப்புக்களையும் நிறைவுசெய்யவுள்ள காலப்பகுதியையும் கருத்திலெடுத்து அதற்குரிய நடபடி முறையை திர்மானித்தல், திருத்தியமைக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தல் சட்டத்தின் 3அ(2) ஆம் உட்பிரிவுக்கமைய ஒவ்வொரு நிருவாக மாவட்டத்தினதும் தேர்தல் தொகுதிகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல், முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வதற்கான வேலைத்திட்டங்களைத்தயாரித்தல், தேர்தல் தொகுதி பிரிப்புச் செயன்முறைதொடர்பாக உரிய தரப்பினரைத் தெளிவூட்டல் , முன்மொழிவுகளை மீளாய்வு செய்தல் தேர்தல் தொகுதி பிரிப்புத் தொடர்பான இறுதித் தீர்மானங்களை எடுத்தல் மற்றும் எல்லை நிர்ணய நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையைத் தயாரித்தல் வரையிலான அனைத்து நடவடிக்கைகளும் நிறைவுசெய்யப்பட வேண்டிய விதம் மற்றும் அதற்காக எடுத்துக்கொள்ளப்படவேண்டிய கால அவகாசம் என்பன நிர்ணயிக்கப்பட்டன.
2. எல்லை நிர்ணய குழு மாவட்ட மட்டத்திலான ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்தினதும் மாவட்ட செயலாளரின் தலைமையிலும் மாவட்டத்தின் சிரேட்ட

நிலஅளவை அத்தியட்சகர் மாவட்ட பிரதி/ உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஆகியோரின் பங்களிப்பிலும் இயங்குகின்ற உபகுழுவொன்றை அமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

3. இவ்வெல்லை நிர்ணய செயல்முறைதொடர்பாக அரசியல் கட்சிகள், பொதுமக்கள் அமைப்புக்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரை அறிவூட்டி அதற்கான முன்மொழிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான அறிவித்தலொன்று 2017.10.13 ஆந்தேதி செய்திப் பத்திரிகைகளின் மூலம் பகிரங்கப்படுத்தப்பட்டதோடு, உரிய முன்மொழிவுகள் 2017.11.02 ஆந்தேதிக்கு முன்னர் கிடைக்கப்பெறவேண்டுமென அவ்வறிவித்தலூடாக உரிய தரப்பினருக்கு அறிவிக்கப்பட்டது. அதற்கு மேலதிகமாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் மாகாண சபைப் பிரதிநிதிகளுக்கும் உரிய முன்மொழிவுகளை சமர்ப்பிக்குமாறும் அழைப்பு விடுக்கப்பட்டது.

4. பொதுமக்களிடமிருந்து வாய்மொழி மூல விடய முன்வைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கு 2017.11.09 ஆந்தேதி முதல் 2017.12.08 ஆந்தேதி வரையிலான காலப்பகுதிக்குள் 25 மாவட்டங்களுக்குள் ஒரு சபை அமர்வு வீதம் சபை அமர்வுகள் நடாத்தப்பட்டன.

## தேர்தல் தொகுதிளைப் பிரித்தொதுக்குவதோடு தொடர்புடைய அளவீட்டு முறை

எல்லை நிர்ணயக் குழு தேர்தல் தொகுதிகளைப் பிரித்தொதுக்குகையில் பயன்படுத்திய அளவீட்டு முறைகள்: 2017 ஆம் ஆண்டின் சட்டத்தினால் திருத்தியமைக்கப்பட்டவாறு முதன்மை சட்டவாக்கத்தின் 3அ(1) முதல் 3அ(11) வரையிலான பிரிவுகளினூடாக குழுவினால் தேர்தல் தொகுதிகளை எல்லை நிர்ணயம் செய்கையில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறை தெளிவுடுத்தப்பட்டுள்ளது. இச் செயன்முறையில் அனைத்து தேர்தல் தொகுதிகளினதும் எல்லை நிர்ணயம் தொடர்பாக குழு ஓரினத்தன்மை வாய்ந்த தீர்மானங்களை எடுத்து, செயற்படுத்துவதை அத்தாட்சிப்படுத்த வேண்டியிருந்தது. அதற்கமைய கீழே குறிப்பிடப்பட்டுள்ள அளவீட்டு முறைகளின் அடிப்படையில் குழுவிற்குக் கிடைக்கப்பெற்ற ஆலோசனைகள், கருத்துரைகள் என்பவற்றை நன்கு ஆராய்ந்து நடவடிக்கையெடுக்க குழு தீர்மானித்தது.

i. 3அ(2) ஆம் பிரிவு: தேர்தல் தொகுதிகளின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 50 சதவீதத்திற்கு சமமான பிரதிநிதிகளின் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்
நிருவாக மாவட்டங்களின் நிலப்பரப்பையும் 2012 ஆம் ஆண்டிற்கான இறுதி மக்கள் தொகை மற்றும் வீடுகளின் கணக்கெடுப்பையும் கருத்திலெடுத்து, தேர்தல்கள் ஆணையாளரினால் மாகாணசபையொன்றின் ஒவ்வொரு நிருவாக மாவட்ட மட்டத்திலிருமிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்தினதும் தேர்தல் தொகுதிகளை கருத்திலெடுத்துத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய 50 சதவீதத்திற்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை குழு தீர்மானிக்க வேண்டியிருந்தது. அவ் வெண்ணிக்கையைக் கணக்கிடுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலுமிருந்து தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 2 ஆல்வகுக்கப்பட்டது. அவ்வாறுவகுக்கின்றபோது 25 மாவட்டங்களில் 18 மாவட்டங்களிலிருந்து தொகுதிவாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை பூரண எண்ணாகக் காணப்பட்டது. ஏனைய மாவட்டங்களுக்குரிய குறித்த எண்ணிக்கை பூரண எண்ணொன்றையும் பின்னமொன்றையும் கொண்டதாக விளங்கியமையால் அவை கிட்டிய பூரண எண்ணிற்கு "round half up method" மூலம் கணிக்கப்பட்டு உரிய எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டது.

ii 3அ(3) ஆம் பிரிவு: தேர்தல் தொகுதிகளைப் பெயர் குறித்தல்

தேர்தல் தொகுதியொன்றுக்குரிய பிரதேசத்தை இனங்காண்பதற்கு வரலாற்று ரீதியாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட ஒரு பெயர் காணப்படாவிடத்து, தேர்தல் தொகுதிகளை பெயர்குறித்தல் ஓரே விதத்திலான நடைமுறைக்கமைய மேற்கொள்ளப்பட வேண்டுமென குழு ஏற்றுக்கொண்டது. அதற்கமைய தேர்தல் தொகுதியொன்றிற்குரித்தான அதிக கிராம அலுவலர் பிரிவுகளின் எண்ணிக்கையும், சனத்தொகையும், உரித்தான பிரதேச செயலகத்தின் பெயரையே உரிய தேர்தல் தொகுதியின் பெயராகப் பெயரிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

iii. 3 அ(4) ஆம் பிரிவு: நிருவாகமாவட்டங்களைத்தேர்தல்தொகுதிகளாகவேறுபிரித்தல்.

வதிவாளர்களுக்கு எளிதில் அணுக முடிந்தவாறு பிரதேசத்திற்குள் காணப்படுகின்ற நீரேந்து பிரதேசங்கள் மற்றும் மலைத்தொடர்கள் என்பவற்றின்பால் உரிய கவனம் ஈர்க்கப்பட்டு தேர்தல் தொகுதி யொன்று தொடர்ச்சியான ஒரு பிரதேசமாக அமைக்கப்பட வேண்டுமென குழு தீர்மானித்தது. நடைமுறைச் செயற்பாடுகளுக்காக வேறு தேர்தல் எல்லைகளின் பகிர்ந்தளிப்பை குறைத்துக்கொள்ளும் தேவைப்பாடு இனங்காணப்பட்ட தோடு, அனைத்து குடியியல் சார் தகவல்களையும் கிராமஅலுவலர்பிரிவுகள் மற்றும் பிரதேசசெயலகப்பிரிவுகள் ஆகிய நிருவாக அலகுகளுக்கமைய மாத்திரம் பெற்றுக் கொள்ளமுடியுமாதலால், அத்தகவல்களை எல்லை நிர்ணயத்தின்போது அடிப்படையாக கொள்வதற்கும் குழு தீர்மானித்தது. சிறிய நிருவாக அலகான கிராம அலுவலர் பிரிவு பிரிபடாமல் இருப்பதிலும் குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டது. அவ்வாறே முடிந்தளவு பிரதேச செயலகப்பிரிவுகள் பிரிபடக்கூடாதென்பதையும் குழு கருத்திலெடுத்தது . எது எவ்வாறாயினும் ஏதேனும் ஒரு விசேட அளவீட்டினைப் பாதுகாக்கும் தேவைப்பாடு ஏற்படுமிடத்து அவற்றை தொடர்ச்சியாக அமையப் பெற்றுள்ள கிராம அலுவலர் பிரிவுகள் பலவற்றின் கூட்டாகப்பிரித்தொதுக்குவதெனவும் குழு தீர்மானித்தது.

iv. 3அ(4)ஆ(i) ஆம் பிரிவு : மாவட்டத்திற்குள் தேர்தல் தொகுதிகளிடையே பொதுமக்களின் எண்ணிக்கையின் விகிதசமசமமின்மையைகுறைந்த மட்டத்தில் பேணுதல்

மாவட்டத்தின் மொத்த சனத்தொகையை தொகுதி ரீதியாக தேர்ந்தெடுக்கப்படவுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையால் வகுப்பதன் ஊடாக ஏதேனும் விகிதசமமின்மை உருவாவதைத் தவிர்க்குமுகமாக முதலில் குழு, ஒரு மாவட்டத்திற்குள் தனி உறுப்பினர் தேர்தல் தொகுதி ஒன்றிற்குரிய சனத்தொகையின் சராசரியை கணிப்பிட்டது. தேர்தல் தொகுதிகளைப் பிரித்தொதுக்கின்றபோது ஏதேனும் இணைப்புடன் கூடிய சமூகங்களின் தேவைப்பாடுகள் மற்றும் புவியியல் அல்லது பௌதிக குணவியல்புகளைக் கருத்திலெடுக்கையில்கணிசமானளவில் விகிதசமமின்மைநிலை உருவாகுவதை தவிர்க்க முடியாததாதலால் மாவட்டமொன்றின் தனிஉறுப்பினர் தேர்தல் தொகுதிகளிடையே விகிதசமமின்மையின் ஆகக்குறைந்த அல்லது ஆகக்கூடியஅளவை 10 சதவீதத்திற்குள் மட்டுப்படுத்துவற்கும் குழு தீர்மானித்தது.